விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-எட்டு Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 வைகாசி 31 வெள்ளிக்கிழமை (14.06.2002) தொலைபேசி 3378 ஒலி 177

நங்கையர் விரும்பும் நவீன
டிசைன் தங்க
நகைகளுக்கு
நியூ
நகுலா
ஜுவல்லறி



74, கஸ்தூரியார் .வீதி,
யாழ்ப்பாணம்.

### பாஸ் நடைமுறை முற்றாக நீக்கம்

# குடாக்கடலில் 24 மணிநேரம் மீன்பிடிப்பதற்கு அனுமதி!

### பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடனான சந்திப்பில் முடிவு

(நமது நிருபர்)

**வடபகுதிக் கடலில் மீனவர்கள் 24மணி நேரமும் மீன்பிடிப்பதற்கு அனுமதி அளிப்பதென கொழும்பில் நேற்று நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டில் முடிவு செய்யப்பட்டுள்ளது.**

**அம் முடிவுகளின்படி யாழ் குடாநாட்டில் எந் நேரமும் மீன் பிடிப்பதற்கு அனுமதிக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ அறிவித்துள்ளார்.**

குடாக்கடலில் சுதந்திரமாக மீன் பிடிகக அனுமதி கோரி கடந்த 6ம் திகதி முதல் நான்கு தினங்கள் யாழ் செயலக முன்றலிலும், யாழ் பிரதேச செயலகம் முன்பாகவும் குடாநாட்டு மீனவர்கள் மறியல் போராட்டம் செய்து செயலகப் பணிகளை செயலிழக்கச் செய்திருந்தனர்.

இதனால் ஏற்பட்டநெருக்கடி நிலையை அடுத்து புனர்வாழ்வு அமைச்சர் ஜெயலத் ஜயவர்த்தனா மீனவர்கள் பிரச்சனையைச் சுலபமான தீர்வு காண்பதற்கு மீனவர்கள் சங்கப் பிரதிநிதிகளே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோவுடனான பேச்சுவார்த்தை ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தார்.

பாதுகாப்பு அமைச்சு செயலகத்தில் நேற்று இடம்பெற்ற இப்பேச்சுவார்த்தையின் போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

மீனவர் சங்கப்பிரதிநிதிகளுடனான இச் சந்திப்பின் போது எடுக்கப்பட்ட முடிவுகளின் பரகாரம் குடாநாட்டு மினவர்கள் இரவும், பகலும் தொழில செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளதுடன்,

(08ம் பக்கம் பார்க்க)

## சமகால அரசியல் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

- சட்டவாளர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ பல நோக்கு கூட்டுறவு சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் சமகால அரசியல் நிலைப்பாடு பற்றி கலந்துரையாடப்பட இருப்பதால் சகல சட்டவாளர்கள் மற்றும் மனிதஉரிமை ஆர்வலர்களையும் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறையினர் கேட்டுள்ளனர். (இ)

## அமைச்சர் இம்தியாஸ் நாளை யாழ். வருவார்

(யாழ்ப்பாணம்)

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு ஊடகத் துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் நாளை 15ந் திகதி சனிக்கிழமை விமானம் மூலம் பலாலியை வந்தடை'வார்.

யாழ்ப்பாணம் வரவுள்ள அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் அன்றைய தினம் காலை யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்திற்கு விஜயம் செய்து அங்கு யுத்த அனர்த்தத்தினால் சேதமுற்ற தபாலகங்ளைத் திருத்துவதற்கு யாழ்ப்பாணப் பிரதம தபாலதிபரிடம் 10 லட்சம் ரூபாவை வழங்கவுள்ளார். இதனைத் தொடர்ந்து 10 தபால் நிலையங்களுக்கு தொலைபேசி வசதி, பக்ஸ் இயந்திரம், சைக்கிள்கள், சீருடைத்துணிகளை வழங்கவுள்ளதுடன் யாழ்ப்பாணத்திற்கு சுமார் 4000 தொலைபேசி இணைப்புக்களை வழங்குவதற்கான ஆரம்ப

(08ம் பக்கம் பார்க்க)

### புலிகளின் தடை நீக்கம் பற்றி அறிய

## நோர்வே அமைச்சர் ஹெல்கீசன் அடுத்த வாரம் கொழும்பு வருவார்

(ஒஸ்லோ)

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் அடுத்த வாரம் கொழும்பு வரவுள்ளார்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளிற்கும் இடையில் பேச்சுவார்த்தை ஆரம்பமாவதற்கு முன்னர் புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும்.

இந்நிலையில் புலிகள் மீதான தடைநீக்கம் தொடர்பாக இறுதி முடிவை அறிந்து கொள்ளவும் தாய்

நிரல் பற்றி ஆலோசனை நடத்தவுமே ஹெல்கீசன் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவரின் கொழும்பு விஜயத்தை அடுத்தே பேச்சுவார்த்தைக்கான திகதி நிர்ணயிக்கப்படவுள்ளதாக

## சகல அரசியல் கட்சிகளுடனும் புலிகள் கலந்துரையாடுவர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் தாய்லாந்தில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகளிற்கு முன்னர் சகல அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாடலொன்றை நடத்தவுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் எதிர்கால அரசியல் நிலை குறித்து ஏனைய அரசியல் கட்சிகளுடன் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்வதே இதன் நோக்கமாகும்.

இதற்கமைய முதலில் தமிழர் விடுதலைக் கூட்டணியுடனும், பின்னர் முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உட்பட ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது. (இ-8)

## புலிகளின் தடை நீக்கம்

வுள்ளார்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளிற்கும் இடையில் பேச்சு

தடைநீக்கம் தொடர்பாக இறுதி முடிவை அறிந்து கொள்ளவும் தாய் லாந்துப் பேச்சுக்களுக்கான நிகழ்ச்சி

அடுத்தே பேச்சுவார்த்தைக்கான திகதி நிர்ணயிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ)

## சிவாவின் எம்.பி பதவிக்கு துரைரட்ணசிங்கத்தை நியமிக்க விடுதலைப் புலிகள் ஆலோசனை

(மட்டக்களப்பு)

வெற்றிடமாகவுள்ள தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு தமிழீழ தேசிய நன்மை கருதியும் தமிழர்களின் ஒட்டு மொத்த நலனைக் கருத்திற் கொண்டும் பொருத்தமான ஒருவரை எம்.பியாக நியமிக்கும் படி தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும் நாடாளு மன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தனைக் கோரியிருப் பதாகத தெரியவருகிறது.

(08ம் பக்கம் பார்க்க)

## வயோதிபரின் சடலம்

(கிளிநொச்சி)

முறிகண்டி பகுதியில் சுமார் 70 வயது மதிக்கத்தக்க இனந்தெரி யாத ஆணின் சடலம் ஒன்று தமி ழீழ காவல் துறையினரால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

கண்டுபிடிக்கப்பட்ட இந்த ஆணின்

(08ம் பக்கம் பார்க்க)

## மீனவர்சங்கங்களுக்கு இன்று விளக்கக்கூட்டம்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலா ளருடன் நேற்று நடைபெற்ற பேச் சுவார்த்தை தொடர்பாக மீனவ கூட்டுறவுச் சங்கத்தலைவர்களுக்கு விளக்கமளிப்பதற்கான கூட்ட மொன்று இன்று காலை 11மணிக்கு யாழ் 'பிரதான வீதியில் உள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தில் நடைபெறவிருப்பதால் அனைத்துத் தலைவர்கள் செயலா ளர்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர் களை கலந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டு றவுச் சங்கங்களின் சமாசத் தலை வர் சி.தவரத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (வ)

## வீடுகளுக்குச் செல்ல படையினர் தடை

(திருகோணமலை)

திருகோணமலை திரியாய் பகு தியில் இருந்து இடம்பெயர்ந்து அங்கு மிளக் குடியமரச் சென்ற பொதுமக்களுக்க கடற்படையினர் அனுமதி மறுத்துள்ளனர்.

பொதுமக்கள் செல்வதற்கு அனு மதி மறுக்கப்பட்டதைத் தொடர்ந்து

(08ம் பக்கம் பார்க்க)

## பெண் மீது இளைஞன் கல் வீச்சு

(யாழ்ப்பாணம்)

கிணற்றில் குளித்துக் கொண்டி ருந்த பெண் மீது கல்லால் எறிந்து அவரின்முகத்தில் காயத்தை ஏற்ப டுத்திய இளைஞர் யாழ் பொலிசாரி னால் கைது செய்யப்பட்டார்.

பிரஸ்தாப இளைஞரை பொலிஸார் யாழ் மாவட்ட நீதிபதி இ.த.விக்கின ராஜா முன்னிலையில் ஆயர்செய்த னர். அவரை 10 ஆயிரம் ரூபா ஆட பிணையில் விடுதலை செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இச் சம்பவம் நந்தாவில் கொக்கு வில் பகுதியில் இடம்பெற்றது. (இ-10)

## புலிகளின் தடைநீக்கம் படையினரைப் பாதிக்காது

### பேராசிரியர் பீரிஸ் லண்டனில் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் மீதுள்ள தடை நீக்கப்படுவதனால் படைக ளின் செயற்திறனோ, பலமோ குறைக்கப்படுமென்று அர்த்தமாகாது பேச்சுக்கள் விரைவில் தொடங்கும் ஒரு அரசியல் தீர்வின் மீது உண் மையான கடப்பாடு பிரதிபலிக்கும் என்பன போன்ற உத்தேசங்கள் உள் ளன. இந்த எதிர் பார்ப்புக்கள் மீது தான் தடை நீக்கம் ஏற்றுக் கொள் ளப்படுகிறது என்று அரசியல் விவ கார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரி வித்தார்.

அண்மையில் லண்டனில் உரை யாற்றிய அமைச்சர் பீரிஸ் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் பிரிட் டனோ, அமெரிக்காவோ புலிகள் மீதான தடையை நீக்கும் என்று அர்த்தமாகாது. தடை செய்தலும், நீக்குதலும் அந்தந்த நாட்டின்

(08ம் பக்கம் பார்க்க)

## இந்திய ஜனாதிபதியாக அப்துல் கலாம் தெரிவாவார்

(புதுடில்லி)

இந்திய ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் பாரதீய ஜனதாக்கட்சியின் சார்பாக நிறுத்தப்பட்டுள்ள பிரபல அணுவிஞ்ஞானி அப்துல்கலாமை ஆதரிக்கப்போவதாக இந்திரா காங் கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

அப்துல் கலாமை ஜனாதிபதியாக தெரிவுசெய்ய எதிர்க்கட்சியான காங்கிரஸ் ஆதரவு வழங்கியுள் ளமையால் அவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவது பெரும் பாலும் உறுதி செய்யப்பட்டுவிட் டது.

இடது சாரிக்கட்சிகள் சில தமது சார்பாக வேட்பாளர்களை நிறுத்து வதற்கு முயற்சி செய்து வருவத னால் ஜனாதிபதியை போட்டியின்றி தெரிவு செய்வதற்கான வாய்ப்பு இல்லாமற் போயுள்ளது. (த)

# அரசியல் தீர்வு ஒன்றுக்காக விடுதலைப்புலிகள் நேர்மையான முயற்சிகளில் இறங்கியுள்ளனர்

## அமைச்சர் ஜயலத் பேட்டி

(கொழும்பு)

தமிழீழவிடுதலைப் புலிகள் சமாதான விரும்பிகளாக உள்ளனர் அரசியல்தீர்வு ஒன்றிற்காக நேர்மையான முயற்சிகளில் இறங் கி இரு க் கும் அவர்கள் அரசியல்நட வடிக்கைகளுக்காக பலஇடங் களிலும் அலுவலகங்களைத் திறப்பது எமக்கு நம்பிக்கை யளிக்கிறது.

அதேபோல் கண்ணிவெடி களை அகற்றுவதிலும் அவர் கள் முழுமூச்சுடன் ஈடுபட்டு வருகின்றனர் எவரின்உதவியு மின்றி நவீனஇயந்திரங்க ளின்றி அவர்கள் கண்ணி வெடிகளை அகற்றும்பணி யில் ஈடுபடுவது நேரில்சென்று பார்த்த எனக்கு பெரும் ஆச் சரியத்தை ஏற்படுத்தியது.

வடக்கு புனர்வாழ்வு புன ரமைப்பு அகதிகள் மீள்குடி யேற்றவிவகார அமைச்சர் டாக்டர் ஜயலத்ஜயவர்த்த னா கொழும்பு தமிழ்தினசரி ஒன்றிற்கு அளித்தபேட்டி யில் இவ்வாறுகுறிப்பிட்டார்.

அவர்தொடர்ந்தும் பேட்டி யளிக்கையில்.

பிரதமர் ரணில்விக்கிரம சிங்காவின் சமாதான முன் னெடுப்புக்களில் நான் பிர தான பாத்திரத்தை வகிக் கின்றேன் நாட்டில் நிரந்தர மான சமாதானத்தை ஏற் படுத்துவதில் பங்காற்றக் கிடைத்த இந்தவாய்ப்பை எண்ணி மிகவும் பெருமிதம் அடைகிறேன்.

ஆயினும் நாட்டில்நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த ஆற்றவேண்டிய கருமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ள சவால்களை எண்ணி சற்று அச்சமுறவும் வேண்டியுள் ளது என்றுகுறிப்பிட்டார்.

பேட்டி தொடர்கையில்.

இலங்கையின் இனப்பிரச் சினைக்கு ஓர்நிரந்தரமுடிவு காண முயலுமாறு சர்வதேச நாடுகள் அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் அழுத்தத்தைக் கொடுத்து வருகின்றன

அதேவேளை சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு முன் னர் தங்கள்மீதான தடை யை நீக்குமாறு புலிகளும்வலி யுறுத்தியுள்ளனர்.

எனவேஇவைகுறித்து நாம் கவனவீனமாக இருக்கமுடி யாது. இவற்றிற்கான தகுந்த பதிலொன்றை எமதுபிரதமர் அறிவிப்பார் அரசியல்தீர் வொன்றை நோக்கிசெல்லும் சந்தர்ப்பத்தில் அரசாங்கம் புலிகள்மீது நம்பிக்கைவைக்க வேண்டும்.

புலிகளும் அரசாங்கத்தின் மீதுநம்பிக்கைவைக்க வேண் டும் அந்தநம்பிக்கையின் அடிப்படையில் பேச்சுவார்த் தைகள் நடைபெறுமாயின் நிரந்தரமான அரசியல்தீர்வை நாம் பெறமுடியும்

புலிகள் மீதானதடை விவ காரத்தில் அரசாங்கம் சிறந்த நல்லதொரு முடிவை எடுக் கும் என்று தெளிவுபடக்கூறி னார். (உ)

## கூடைப் பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க ஆதரவுடன், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு விழாச்சபை நடத்தும் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று பி.ப. 4 00 மணிக்கு கோப் பாய் ஐ.வி.க. (எ) எதிர் ஒல் கோட்ஸ் வி. க,

பி ப 5 00 மணிக்கு உடற் கல்வி வி.க. எதிர் பல்கலைக் கழக வி.க. ஆகியன கோப் பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் நடைபெற வுள்ளன. (உ-3)


## UNIVERSTY OF JAFFNA
## SRI LANKA

### Faculty of Graduate Studies
### Master of Education Course-
### 2002 \ 2003

Applications will be received by the Faculty of Graduate Studies for the Master of Education Course upto 2002-07-19,

**ADMISSION REQUIREMENTS:**

a) A degree from a recognized University approved by the Senate,
b) A Postgraduate Diploma in Education.
and
c) A minimum of two years experience in teaching in a school or other educational experience relevant to the course.

**DURATION:**

One year,
Lectures will be conducted in evenings and on Saturdays.

**ADMISSION**

Admission to the Course will be made on the basis of a written test and/or an interview conducted by the University.

**WRITTEN EXAMINATION**

a) The written examination will consist of a paper on 'General Proficiency in Education' of two hours duration.
b) The contents of the paper will be in such a way to test
  I) the candidates knowledge of Concepts, Principles, and Practices of Education in general, and
  II) aspects related to current educational practices in Sri Lanka.

**MEDIUM OF INSTRUCTION:**
Tamil

**COURSE FEE**

| | | |
|---|---|---|
| Course Fee | : | Rs 20,000/- |
| Application Fee | : | 100 - |
| Registration Fee | : | 750 - |
| Library Fee | : | 750 - per year |
| Library Deposit | : | 1,000 - (Refundable) |

Application forms could be obtained at the Office of the Dean, Faculty of Craduate Studics. Those who wish to obtain them in person are required to produce a receipt from the People's Bank, University Branch or Shroff, Finance Branch of the University of Jaffna on a payment of Rs. 100/- per forms. Those who wish to obtain the forms by post are requested to send a money Order/Postal Order for Rs 100/- drawn in favour of Bursar, University of Jaffna together with a self - addressed Rs. 4.50 - stamped envelope of 23x10 cm, size to the Office of the Dean, Faculty of Graduate Studies.

Completed applications should be submitted to the Dean's office, Faculty of Graduate Studies, University of Jaffna on or before 2002 07.19

*REGISTRAR*
University of Jaffna.
2002-06-11

(C-4413)


## இராசி பலன்

14 - 06 - 2002
வைகாசி 3 1 வெள்ளி
சதுர்த்தி மு.இ 9 42 வரை
பூசம் ந.இ 12.07 வரை
இராகுகாலம் 10 23 - 11.53
நல்லநேரம் 5. 53 - 7.23

**மேடம்**
தொழிற்சிந்தை, தெய்வ தரிசனம், விடாமுயற்சி, காரிய தாமதம்.

**இடபம்**
காரிய தாமதம், நண்பர்கள் உதவி, உறவினர்சந்திப்பு, கூட்டுமுயற்சி.

**மிதுனம்**
பிரயாணம், மாதர்நட்பு, சென்றஇடத்தில் சிறப்பு.

**கடகம்**
பணவரவு, புதியதொழில் முயற்சி, சயனசுகம், மனக் கிலேசம்.

**சிங்கம்**
வீண்விவாதம், உற்சாகம்' தனலாபம், நண்பர்கள் உதவி

**கன்னி**
நித்திரைக்குறைவு, குடும்ப சிந்தை, புதியதொழில்முயற்சி நண்பர்கள் உதவி.

**துலாம்**
போசனசுகம், இலட்சுமி கரம், பெரியோர் மதிப்பு, மாதர்சிந்தை.

**விருச்சிகம்**
காரியஅனுகூலம், பணவிர யம், உடல் நலக் குறைவு, சந்தோசம்.

**தனுசு**
வீண்பிரச்சினை, கற்பனை மிகுதி, பிரயாணம், தொழிற் சிந்தை,

**மகரம**
மனப்பதற்றம், காரிய அலைச்சல், சுவாரஸ்யம், குடு ம்பசுகம்,

**கும்பம்**
நினைத்தகாரியம் கைகூடும் ரோகபயம், மாதர்நட்பு.

**மீனம்**
அன்னியர் சந்திப்பு, புதிய உறவு, மனச்சோர்வு, வீண் கற்பனை.

(பழைய நேரப்படி கணிப் பிடப்பட்டது)

வளவன்

தீவக வலயத்தில் கடமையாற்றிய

## 8 ஆசிரியர்கள் ஏனைய வலயங்களுக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

தீவகவலயத்தில் இருந்து எட்டுஆசிரியர்கள் வலிகாமம் மற்றும் யாழ்வலயங்களுக்கு மாற்றப்பட்டிருப்பதாக மேல திக மாகாண கல்விப்பணிப் பாளர் எஸ்.சிவராசா தெரி வித்துள்ளார் அவர்களின் பெயர்விபரங்கள் வருமாறு

திருமதி தெ.சௌந்தரதா சன்-வலிகாமவலயம், திருமதி வ.ஒளிவண்ணன்- யாழ்வல யம், சோ.சற்குணநாதன் யாழ்வலயம், இ. தருமரட் ணம்-யாழ்வலயம், திருமதி க.இராவணபவானந்த மூர்த்தி-யாழ்வலயம், திருமதி கு.தர்மகுலராணி- யாழ்வல யம், செ.சுகேந்திரன்- யாழ் வலயம், பொ.ஆறுமுகம்-யாழ் வலயம்

இவர்களுக்கான இடமாற் றக்கடிதங்கள் தபால்மூலம் அனுப்பிவைக்கப் பட்டுள் ளன வலயக்கல்விப்பணிப்பா ளர் இவர்களை பொருத்த மான பாடசாலைகளுக்கு இட மாற்றம் செய்வார்என தெரி விக்கப்பட்டது. (உ-2)

## வர்த்தகப் பிரமுகர்கள் 40 பேர் இன்று வருகை

(யாழ்ப்பாணம்)

கைத்தொழில் சேவைகள் மன்ற பணிப்பாளர் காமினி சேனநாயக்கா தலைமையில் குருநாகலை மாவட்ட கைத் தொழில் சேவைகள் மன்றத் தின் பிரதிநிதிகளான 40 பேர் கொண்ட வர்த்தகப் பிரமுகர்கள் இன்று வெள் ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் வணிகர் கழ கப் பணிமனையில் ஓர் கலந் துரையாடலை நடாத்த வுள் ளனர்.

இக்குழுவில் விவசாய உற் பத்திப்பொருட்கள், தேங்காய் மற்றும் தேங்காய் உற்பத்திப் பொருட்கள், விவசாய இயந் திரங்கள், உழவு இயந்திரமும் அதன் உதிரிப்பாகங்கள், துவிச்சக்கரவண்டி, அதன் உதிரிப்பாகங்கள், ரயர், ரியூப் உருக்குஇரும்புப் பொருட்கள் பிளாஸ்ரிக் பொருட்கள், ஓடு, காகிதாகிப் பொருட்கள், புகையிலையும் அது சார்ந்த உற்பத்திப் பொருட்களும், விதைகள் ஆகிய துறைகளை சார்ந்த முக்கியஸ்தர்கள் அடங்குவதால் இவற்றில் ஆர்வமுள்ள யாழ் மாவட்ட வர்த்தகர்கள், யாழ்மாவட்ட ஆர்வமுள்ள விவசாயிகள் தொழில் முயற்சியாளர்கள் அனைவரையும் இக்கலந் துரையாடலில் பங்கு பற்றி பயன்பெறுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது.

அரச, அரசசார்பற்ற பிர திநிதிகளும் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

வினாத்தாள்கள் மொழிமாற்றம்

## பரீட்சைக்கு தோற்றும் தமிழ்மாணவர்கள் பாதிப்பு

தமிழ்மொழிமூலம் க.பொ.த. உயர்தர மற்றும்சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு சிங்களத் தில் இருந்து மொழிபெயர்ப் புச்செய்யப்பட்ட வினாத் தாள்கள் வழங்கப்படுவதன் மூலம் தமிழ்மாணவர்களுக்கு பாதகம்ஏற்படுகிறது என்ப தனை அமைச்சர் பீரிஸ் ஏற் றுக்கொண்டுள்ளார்.

சமாதான முயற்சிகள்பற்றி அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற மாநாடொன் றில் ஓய்வுபெற்ற பல்கலைக் கழக விரிவுரையாளர் எதிர் வீரசிங்கன் இதுவிடயத் தினைச் சுட்டிக்காட்டிய போது அதனை ஏற்றுக் கொண்ட பீரிஸ் இதனைக் கருத்தில் கொண்டு சம்பந்தப் பட்டவர்களுக்கு அறிவித்து ஆவனசெய்வேன் என உறுதி யளித்தார். (உ)

## நாளை சமாதானக் கருத்தரங்கு

'யுத்தத்தின் விளைவுகளும் சமாதானத்தின்நன்மைகளும' என்னும் தலைப்பிலான சமாதானக் கருத்தரங்கு ஒன்று நாளை வவுனியா முத்தையா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை சமாதானப் பேரவையின் அனுசரணை யுடன் மனிதவள மேம்பாட்டு நிறுவனம் இக்கருத்தரங்கை ஒழுங்குசெய்துள்ளது.

இக்கருத்தரங்கில் மனித வள மேம்பாட்டு நிறுவன இயக்குநர் எஸ். பாலகிருஷ் ணன் அதிவணக்கத்துக்குரிய பத்தேகம சமிந்ததேரர் ஆகி யோர் கருத்துரை வழங்க வுள்ளனர்.

# இலங்கை-இந்தியா பொருளாதார ஒப்பந்தம் இருதரப்பு உறவுகளுக்கு புதிய உத்வேகம்

## ரைம்ஸ் ஒவ் இந்தியா தகவல்

(கொழும்பு)

இலங்கை - இந்திய நாடுகளிடையேயான பொருளாதார ஒப்பந்தம் இருதரப்பு பொருளாதார உறவுகளுக்கு ஒரு புதிய உத்வேகத்தை கொடுத்துள்ளது என்று 'ரைம்ஸ்ஒவ்இந்தியா' என்ற பத்திரிகைசெய்திவெளியிட்டுள்ளது.

ஐக்கியதேசிய முன்னணி அரசு ஆட்சி அமைத்த பின்னர், இந்தியாவுக்கான விஜயத்தை இரண்டாவது தடவையாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டிருந்தார். பிரதமரின் விஜயத்தை வரவேற்றே அப்பத்திரிகை இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

திருகோணமலையில்உள்ள எண்ணெய் குதங்களை இந்தியாவுக்கு குத்தகைக்கு வழங்குவதுஎன்றஇலங்கைப் பிரதமரின் முடிவு. பொருளாதார ஒத்துழைப்புக்கு புதிய உத்வேகத்தைக் கொடுத்துள்ளதாகவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் கொழும்புக்கும் தூத்துக்குடிக்கும் இடையில் கப்பல் சேவையினை நடத்துவது, இரு நாடுகளிடையேயான விமான சேவைகளை அதிகரிப்பது உட்பட பல்வேறு விடயங்கள் சம்பந்தமாக இந்தியாவிடமிருந்து இலங்கை பலவிதமான உதவிகளை நாடியுள்ளதாகவும்,

இவ்விரு நாடுகளிடையேயான பொருளாதார ஒப்பந்தம் தொடர்பாக இலங்கையின் சகல கட்சிகளும் ஆதரவு தெரிவித்துள்ளதாகவும் அப்பத்திரிகையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(இ-8)

# தமிழ் விழா

(புத்தூர்)

அகில இலங்கை அமுதசுரபி கலாமன்றம் நடத்தும் தமிழ் விழா நாளையும் நாளை மறுதினமும் இடம்பெறவுள்ளது.

நாளைய நிகழ்வுகள், பி.ப. 4 மணிக்கு நீர்வேலிகாமாட்சி அம்பாள் திறந்தவெளி அரங்கில் இ. நித்தியானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புகள் பீடாதிபதியும் சிறப்பு விருந்தினர்களாக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர், கோப்பாய் பிரதேச செயலர் க. கேதீஸ்வரன், கவிஞர் இ. முருகையன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வு ந. சிவநேசன் தலைமையில் பி.ப. 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இதில் பிரதமவிருந்தினராக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் எஸ். சிவலிங்கராசா, யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்களான க. சிவானந்தமூர்த்தி, கலாநிதிப. புஸ்பரட்ணம், யாழ். மாவட்டஅரசியல் துறைப் பொறுப்பாளர் ச. இளம்பரிதி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ-232)

# கிளிநொச்சியில் தொழில் திணைக்களம்

(கல்வயல்)

தொழில் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகம் கிளிநொச்சிபுதிய பேருந்து நிலையத்திற்கு முன் உள்ள இரத்தினபுரம் வீதியிலுள்ள தனியார் வீடொன்றில் இயங்கிவருகிறது.

(உ-111)

# நுளம்புப் பெருக்கம்

வண்ணார் பண்ணை, ஓட்டுமடம் பகுதிகளில் நுளம்புப் பெருக்கம் மிகுந்து காணப்படுவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

இப் பகுதியில் சிறு சிறு பற்றைகள் நீண்ட காலமாக வெட்டப்படாமல் வளர்ந்து காணப்படுவதும், குறிப்பிடத்தக்கது.

(உ.111)

# சடுகுடுவிளையாடிய இளைஞன் ரயிலுக்குப்பலி

(புத்தளம்)

புத்தளத்தில் இருந்து பாலாவி சென்று கொண்டிருந்த புகையிரதத்தின் முன் சடுகுடுவிளையாடிக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் குறுக்கே பாய்ந்து அந்த இடத்திலேயே உடல் சிதறிப்பலியானார்.

புத்தளம் பாலாவி புகையிரதப்பாதையின் அருகில் நேற்று முன்தினம் மாலை சடுகுடு விளையாட்டில் ஈடுபட்டிருந்த இளைஞர்களில் ஒருவர்ரயில்பாதைக்குக்குறுக்கேபாய்ந்த போதுஇப்பரிதாப சம்பவம் இடம் பெற்றது.

(வ)

# றுகுணு பல்கலை விஞ்ஞானபீட மாணவன் கைது

(கொழும்பு)

றுகுணுபல்கலைக்கழக விஞ்ஞானபீடமாணவர்களுக்கிடையில் நேற்று முன்தினப் மாலைமோதல்கள்இடம்பெற்றன.

விஞ்ஞானபீட மாணவர் மன்றத்திற்கு புதிய உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதில் ஏற்பட்டபோட்டி காரணமாகவே இம்மோதல்கள் இடம் பெற்றுள்ளது.

சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் மாணவர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

(த-8)

# அம்புலன்ஸ் வண்டி மீள ஒப்படைப்பு

(காரைநகர்)

காரைநகர் கிராமிய வைத்தியசாலைக்குரிய அம்புலன்ஸ் வண்டி திருத்தப்பட்டு மீள ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் காரைநகர் வைத்தியசாலையில் இருந்து அவசர நோயாளி ஒருவரை யாழ். போதனாவைத்தியசாலையில் சேர்த்துவிட்டு மீண்டும் காரைநகர் வரும் வழியில் அராலிப் பகுதியில் விபத்துக்குள்ளாகி சேதமடைந்த அம்புலன்ஸ் வண்டியே திருத்தப்பட்டு மீள ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(உ-246)

# அரசு - புலிகள் சமாதானப் பேச்சு தாய்லாந்தில் வெவ்வேறு இடங்களில்

## பாதுகாப்புக் காரணங்களுக்காகவாம்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் தாய்லாந்தில் இடம்பெறவுள்ள சமாதானப்பேச்சு வார்த்தைகள் பாங்கொங் நகரின் பல்வேறு இடங்களில் நடைபெறவுள்ளன.

இத்தகவலை தேசிய சமாதானச் செயலகம் வெளியிட்டுள்ளது.

பாதுகாப்புக் காரணங்களைக கருத்தில் கொண்டே தாய்லாந்து அரசாங்கம் இந்த ஒழுங்கைச் செய்துள்ளது.

இதேவேளை, பேச்சுவார்த்தைக்கான ஒழுங்குகளைச் செய்யவென தாய்லாந்து சென்றிருந்த சமாதானச் செயலக அதிகாரிகள் மற்றும் இலங்கைக்கான தாய்லாந்து தூதுவர் எஸ். பணிக்கார ஆகியோர் அண்மையில் நாடு திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ)

# அதிபர் சங்கப் பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண அதிபர்கள் சங்கப் பொதுக் கூட்டம், எதிர் வரும் ஞாயிற்றுக் கிழமை மு.ப.10.00 மணிக்கு யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியில் நடைபெறவுள்ளதாக அதிபர் சங்கத் தலைவர் க. இராசதுரை அறிவித்துள்ளார்.

(உ-3)

# காவலூரில் கடற்றொழில் கூட்டுறவுச் சமாசம் அமைக்க நடவடிக்கை

(காரைநகர்)

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் உள்ள பதிவு செய்யப்பட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களை ஒன்றிணைத்து கடற்றொழில் கூட்டுறவுச் சங்க சமாசம் ஒன்றினை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட கடற்றொழில் பரிசோதகர் க.தர்மலிங்கம் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற பிரதேச கடற்றொழில் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

பிரதேச ரீதியாக சமாசம் அமைப்பதனால் பல்வேறு நன்மைகளையும், உதவிகளையும் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் சந்தைப்படுத்தல், குளிரூட்டப்பட்ட வாகனம் பெற்றுக் கொள்ளல் போன்ற வசதிகளை இலகுவாக பெற்றுக் கொள்ள முடியும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன், சீனோர் தொழிற்சாலையை மீள இயக்குவதற்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்ததுடன் கண்ணாடி இழையினாலான வள்ளம் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டுள்ளதாகவும் இப் பிரதேசத்திற்கு பொருத்தமானதாயின் மேலும் உற்பத்தி செய்யப்பட்டு தருவிக்கலாம் எனவும் தெரிவித்தார்.

(உ-246)

# மாநகரசபை ஆற்றிய பணிகளுக்கு பாராட்டு

(நெல்லியடி)

மூத்த தமிழ்த் தலைவர் சிவாவின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ளும் வகையில் யாழ்ப்பாணம் வந்திருந்த உலகத் தமிழர் பேரவைத் தலைவர் டாக்டர் இரா. ஜனார்த்தனம் அண்மையில் யாழ். மாநகர சபைக்கு விஜயம் செய்தார்.

அங்கு அவருக்கு எளிமையான வரவேற்புஅளிக்கப்பட்டது.

முதல்வர் எஸ். கந்தையன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உரையாற்றிய இரா. ஜனார்த்தனம், இக்கட்டான சூழ்நிலையிலும் மனம் தளராதுமாநகரசபை ஆற்றிய பணிகளைப் பாராட்டினபர்.

(உ-247)

# சுவிஸ். சக்தி இல்ல அனுசரணையுடன் ஊனமுற்றவர்களுக்கு முச்சக்கரவண்டிகள்

(யாழ்ப்பாணம்)

சுவிற்சர்லாந்து சக்தி இல்லத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண சமூக நலன்புரி அமைப்பு நடத்தும் ஊனமுற்றவர்களுக்கான முச்சக்கர வண்டி மற்றும் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கு அப்பியாசப்புத்தகங்கள் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு சுன்னாகம் ஐயனார் கல்யாண மண்டபத்தில் யாழ்ப்பாண சமூக நலன்புரி அமைப்பின் தலைவர் ச. தேவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும் யாழ்ப்பாண மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் சு. பரமநாதனும் கௌரவ விருந்தினராக சமூக நலன்புரி அமைப்பின் ஸ்தாபகரும், மாவட்ட இணைப்பாளருமாகிய க.சற்குணேஸ்வரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ-3)

# இலங்கை ஆசிரியர் சங்க யாழ்.கிளைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ்.மாவட்டக் கிளையின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10.00மணிக்கு யாழ். மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அத்தருணம் தாய்ச் சங்கத்தின் பிரதிநிதிகளான தலைவர் தோழர் பி.பேர்ட்டிறண வீரகே, பொதுச் செயலாளர் தோழர் சி.ஜெயதுங்கா, உப செயலாளர் தோழர் ஜோசெப்ஸ்டாலின் மற்றும் சில மத்திய குழு உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்

எனவே அங்கத்தவர்கள் தங்களது பிரச்சினைகள், பொதுப் பிரச்சினைகள் பற்றிக் கூட்ட இறுதியில் கலந்துரையாட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதால், கூட்டத்துக்கு முன்பதாக தமது பிரச்சினைகளை மூன்று பிரதிகளில் எழுதி மாவட்டச் செயலாளரிடம் ஒப்படைக்குமாறு யாழ்.மாவட்டக் கிளைச் செயலாளர் அ.பாலச்சந்திரன் அறிவித்துள்ளார்.

(உ)

# புதிய பொருளாதாரதிட்டம் மக்கள் முன்னிலையில் பிரதமர் சமர்ப்பிப்பார்

(கொழும்பு)

நாட்டின் புதிய பொருளாதாரத்திட்டத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காஅடுத்த மாதம் நாட்டு மக்கள் முன்னிலையில் சமர்ப்பிக்கவுள்ளார் என கிராமிய பெருந்தெருக்கள் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் மூலம் நடுத்தர மற்றும் நீண்டகால அபிவிருத்தி இலக்குகளை அடைய முடியும் என்றும்,

அரசாங்கம்எதிர்கொள்ளும் பிரதான சவாலாக அமைவது பொருளாதாரத்தை மறுசீரமைப்பதாகும். இதற்கு தனியார் துறைஒத்துழைக்கவேண்டும் என்று பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தற்போது வழங்கப்பட்டுள்ள வரி நிவாரணங்கள் காரணமாக இதுசாத்தியமாவதால் பிரகடனப்படுத்தப்படாத சொத்துக்களை, நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்துவது சம்பந்தமான வாய்ப்புகளைஉபயோகிக்குமாறும்அவர்மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(உ-9)

# கொழும்புத்துறை கிழக்கில் மிதிவெடி விழிப்புணர்வு பிரசார நடவடிக்கை

ஜே/62 கொழும்புத்துறை கிழக்கு கிராம சேவகர் பிரிவிலுள்ள சென்ஜோசப்வித்தியாலத்தில் அண்மையில் மிதிவெடி விழிப்புணர்வுக் கருத்தரங்கு யாழ்ப்பாண பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளர் தலைமையில்சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் நடத்தப்பட்டது.

இப்பிரிவில்மீள்குடியமர்ந்து வரும் மக்களுக்கு வீடு வீடாக சென்று வெடி பொருட்கள் சம்பந்தமான விழிப்புணர்வு பிரசார நடைவடிக்கைகளில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஈடுபட்டதுடன். பொதுமக்கள் கூடும் பிரதான இடங்களில் யுனிசெவ் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட வெடி பொருட்கள் சம்பந்தமான விழிப்புணர்வு சுவரொட்டிகளும்ஒட்டப்பட்டுள்ளன.

(உ)

# போரூட் நிறுவனத்தினால் பயனுறு திட்டங்கள் தீவகத்தில் நடைமுறை

(காரைநகர்)

போரூட் நிறுவனத்தால், தீவுப்பகுதியில்2002ஆம் ஆண்டுக்கான பல செயல் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுவதாக போரூட் நிறுவன ஊர்காவற்றுறை திட்ட இணைப்பாளர் என். மூர்த்தி தெரிவித்துள்ளார்.

வேலணை, தம்பாட்டி, செட்டிபுலம், அனலைதீவு, எழுவைதீவு, சின்னமடு, ஊர்காவற்றுறை போன்ற பகுதியைச் சேர்ந்த 146 பயனாளிகளிற்கு மலசல கூடம் அமைப்பதற்கென தலா 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருவதாகவும்,

அத்துடன் புதிய கிணறு அமைப்பதற்கென 8 பயனாளிகளிற்கும், கிணறுகள் திருத்துவதற்கென 5 பயனாளிகளிற்கும் தலா 8 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, வறிய மக்களின் வீட்டுத்திட்டத்தின் கீழ் 86 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு புதிய வீடு அமைப்பதற்கென தலா 38 ஆயிரம் ரூபா வழங்கப்படுவதாகவும்,

இத்திட்டத்தில், பயனாளிகள் 15ஆயிரம் ரூபா பங்களிப்புச் செய்யவேண்டும் என்றும் தெரிவித்தார்.

இத்திட்டங்கள் காரைநகரில் ஊரி, மருதபுரம், கிராமங்களிலும் ஊர்காவற்றுறையிலும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

தவிர, போரூட் நிறுவனத்தால் ஊர்காவற்றுறை முன்பள்ளி ஆசிரியர்களிற்கான பயிற்சி நடைபெறவுள்ளதாகவும், இப்பயிற்சியில் 30 பயிற்சி முன்பள்ளி ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு பயிற்சிக் காலத்தில் உதவு தொகையாக ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்றும் இப்பயிற்சி 6 மாதம் நடைபெறும் என்றும் மேலும் தெரிவித்தார். (உ-246)

## தொழில் நுட்ப அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

பாடசாலைக் கட்டடங்களை புனர் நிர்மாணம் செய்வதற்கான கேள்விகளை கல்வித்திணைக்கள தொழில் நுட்ப அதிகாரிகளே பெற்றுள்ளதாக கூறப்படுகிறது.

கல்வியமைச்சின் பேச்சாளர் ஒருவர் இதுகுறித்து கருத்துத் தெரிவிக்கையில், நிர்மாணிப்புப் பணிகளை மேற்பார்வைசெய்ய வேண்டியவர்களான தொழில் நுட்ப அதிகாரிகளின் இச்செயல் சட்டத்தை மோசமாக மீறிய செயலாகும் எனவும்,

இது தொடர்பாக, பாடசாலைக் கல்வியமைச்சர்சரநிமாலாராஜபக்ஷவுக்குபலமுறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தொழில் நுட்ப அதிகாரிகள் வேறுபெயர்களில் இந்த கேள்வி அறிவித்தல்களை எடுத்து தாமே நிறைவேற்றுகின்றனர். இவ்வாறாக500பாடசாலைகளின் புனரமைப்புப் பணிகளும், நூலகங்கள் நிர்மாணமும் இவர்களின் கைகளுக்கு சென்றுள்ளன.

தரங்குறைந்த பொருட்களைப்பாவித்தே இவைகள்கட்டப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதையடுத்து இவர்களுக்கெதிராக சட்ட ரீதியாக நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகவும் அவர்மேலும்தெரிவித்துள்ளார். (உ)

## பயணிகள் சிரமம்

(துன்னாலை)

போக்குவரத்துச்சேவையில் ஈடுபடும் தனியார் மினிபஸ் நடத்துநர்கள் பயணிகளை ஏற்றி இறக்குவதில் பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்கின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து அச்சுவேலி, பருத்தித்துறை ஆகிய பகுதிகளுக்கிடையே போக்குவரத்து சேவைகளில் ஈடுபடும் தனியார் பஸ்களும் அரசபேருந்துகளும் போட்டிபோட்டு சேவையில் ஈடுபடுவதனால் பயணிகள் சிரமங்களை அனுபவிப்பதுடன் வயோதிபர்கள் இதனால் பெரிதும் பாதிப்படைகின்றனர். (த- 41)

## யாழ்ப்பாணத்திலும் முத்தமிழ் கலையரங்கம்

(யாழ்ப்பாணம்)

வன்னிப்பெருநிலப்பரப்பில் மாதாந்தம் மேடையேற்றப்பட்டுவரும் முத்தமிழ்கலையரங்கம் நிகழ்வு யாழ்ப்பாணத்திலும் முதன்முறையாக மேடையேற்றப்படவுள்ளது.

வன்னிக்கலைஞர்கள் பங்குபற்றும் முத்தமிழ் கலையரங்கம் நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை7 மணிதொடக்கம் இரவு 11மணிவரை நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் மேடையேற்றப்படவுள்ளது.

வன்னி பெருநிலப்பரப்பிற் 18தடவைகள் மேடையேற்றப்பட்ட இந்நிகழ்வு 19வது தடவையாக யாழ்ப்பாணத்தில் மேடையேறவுள்ளது.

புலிகளின்குரல் வானொலியூடாக புலிகளின்குரல் வானொலிமன்றம் எனும்சிறப்பு நிகழ்ச்சியாக இந்நிகழ்வு ஒலிபரப்பப்பட்டு வருகிறது.

இதனை குடாநாட்டுமக்களும் தெளிவாகக் கேட்பதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை புலிகளின் குரல் வானொலி மன்ற கலைஞர்களை குடாநாட்டின் ஒவ்வொருபிரதேச செயலர் பிரிவுகளூடாகவும் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகளும் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளது. (த)

## குருநகரில் நாடகம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ கலை பண்பாட்டுக் கழகத்தின் 'கரை தேடும் ஓடங்கள் என்ற வீதி நாடகம் கடந்த செவ்வாய் இரவு குருநகர் சென்றோக் கலையரங்கில் இடம் பெற்றது. (த-06)

## சமாதான களியாட்ட விழா

(வவுனியா)

வவுனியாவில் சமாதானக் களியாட்டவிழா நேற்று இரவு வவுனியா காமினி வித்தியாசாலை மைதானத்தில் ஆரம்பமாகி 16ஆம் திகதி வரை தினமும் பிற்பகலில்நடைபெறவுள்ளது.

இச்சமாதானக் களியாட்ட விழாவில் சாகச விளையாட்டுக்கள் பல இடம்பெறவுள்ளன. (வ)

## சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அமைக்கப்பட்டது

(திருநெல்வேலி)

சர்வதேசதமிழீழ மாணவர் பேரவை அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. உலகநாடுகளிலுள்ளபல்கலைக்கழகங்களிலுள்ள தமிழ் மாணவர்களையும் ஏனையதமிழ் மாணவர்களையும் இணைத்து இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ் மாணவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கு எதிராக குரல் கொடுப்பதே இதன் நோக்கமாக அமைந்துள்ளது.

இதன் தலைவராக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய முன்னாள் தலைவர் எஸ். கஜேந்திரனும், செயலாளராக கனடா பல்கலைக்கழகதமிழ்மாணவர் ஒன்றியத் தலைவர் கே. ரவிசங்கரும், பொருளாளராக யாழ் பல்கலைக்கழக மாணவர்ஒன்றியத் தலைவர் கே. பரணிதரனும் பதில் பொருளாளராககனடா மாணவர்ஒன்றிய உறுப்பினர் எஸ். ஜீவதனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (த-43)

## பண்ணிசை வகுப்பு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அகிலஇலங்கைத் திருமுறை மன்றம் சேக்கிழார் குருபூசை தினத்தை முன்னிட்டு நடாத்தும் இலவச தேவார பண் இசை வகுப்புகள் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

அகிலஇலங்கைத் திருமுறை மன்றத் தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. தேவார இசைமணி அருளிசை அரசு இரா. திருஞானசம்பந்தன் காலை 8.30 மணிக்கு இவ் இசைவகுப்பை ஆரம்பிக்கவுள்ளார்.

மன்றத்தின் உபதலைவர் சைவப்புலவர் சு. செல்லத்துரை சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (த-8)

## புலிகளின் பகுதிகளுக்கு தொலைபேசி இணைப்பு வழங்க அனுமதி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களுக்கு தொலைபேசி இணைப்புக்களை வழங்குவதற்கு பாதுகாப்பு அமைச்சு நேற்று முன தினம் அனுமதி வழங்கியுள்ளது.

தமிழ்த்தேசியகூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் பாதுகாப்பு அமைச்சிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமையவே இந்த அனுமதி வழங்கப் பட்டுள்ளது. (த)

## நயினை நாகபூசணி அம்மன் பாமாலை - 05

(உற்சவகாலம்)



### தமிழ் உய்யவென்றே ஆட்சிசெய்

அரவ மிசை ஏறிவரும் அன்னையே
அகில மேழும் வணங்குவதும் உன்னையே
இரவு பகல் எந்தநாளும் உன்னடி
ஏத்தி நின்றோம் தந்திடாயுன் பொன்னடி
விரத மோடு நேர்த்தி வைத்து அடியவர்
வேண்டி நின்றார் அவர்களிடர் மடியவே
அரவ மீது வீற்றிருந்து காட்சி செய்
அன்னை தமிழ் உய்யவென்றே ஆட்சிசெய்!

கவிஞர்- நயினை இராகுலன்

### துதிப்போரை காத்திடுவாள்

தஞ்சமென வருவோரைக் காத்திடுவாள்
தரணி புகழ் நயினையுள்ள நாகம்மை
நெஞ்சினிலே தினமும் நாம் நினைத்திருந்தால்
துன்பங்கள் அத்தனையும் நீங்கிடுமே
அஞ்சேலென அபயம் அளிப்பவளை
அனுதினமும் துதித்து அருள் பெறுவோம்.

க. சதீபன்

### 'அமுத சுரபியானாய்'

சப்ததீவுகளில் சஞ்சரிக்கும் - நாகம்மா
சண்டைகள் நீக்கிடுவாள் - நாகம்மா
உப்புக்காற்றில் ஒளிவிடும் நாகம்மா
உரிமை தழைத்திட எழுந்தருள் நாகம்மா
கப்பல் திசை மாற்றிட கருணை மழையானாய்
கயமை அழிந்திட அமுத சுரபியானாய்

'வேலணைபாலா'

### நிலையான பராசக்தி

எடுப்பு

சக்திவளர் பீடத்திலே சமரசமாய் நயினையிலே
சித்திதர வீற்றிருப்பாள் சிவசக்தி நாகம்மாள்
(சக்தி)

தொடுப்பு

எத்திசையில் உள்ளோரும் இவளருளைப்
பெறுவதற்காய்
சித்தமுடன் வந்திடுவார் சீரெல்லாம் பெற்றிடுவார்
(சக்தி)

முடிப்பு

வித்தைகளும் பொருள்வளமும் வேண்டுமெழில்
மழலைகளும்;
மெத்தவுமே பெற்றுலகில் மேன்மைபல எய்திடுவார்;
சுத்தசக்தி சுடர்ச்சக்தி சோதிவளர் ஏகசக்தி
நித்தமுமே புவிமீது நிலையான பராசக்தி
(சக்தி)

நயினைக் கவிஞர்-நாக சண்முகநாதபிள்ளை

### பதமலரே சரணம் சரணம்

ஆயிரம் கோடி நாமங்கள் பாடி
அன்னையே உன்னையே நாடிவந்தோம்
வாயினிக்கும்; உள்ளே மனமினிக்கும்; எங்கள்
வாழ்வெல்லாம் வளநலம் நனிசிறக்கும்

பூவினைக் கொண்டு நாகங்கள் பூசிக்கும்
புவனேஸ்வரி பீடம் அமர்ந்தவளே!
தேவி நினைத் தொழுவார் தேம்புவதேயில்லை!
தீரராய்ச் சீருடன் வாழ்வாரே!

மணித்தீவின் நடுவே மணிக்கோயில் கொண்டாய்
மானஸா தேவியே! மாதவ்ளே!
பணியாக நாகமணி பார்வதியே! உமையே!
பதமலரே சரணம் சரணமம்மா!

நிவேதிதா

## இன்று ஒரு தகவல்

# அகங்காரம் கொண்டவன் அவமானம் அடைவான்

ஓர் ஊரில் ஒரு ராஜா இருந்தார். ராஜாவின் மந்திரி ஒருநாள் காட்டுக்குப் போனார். அந்தக்காட்டில் ஒரு துறவிஇருந்தார். அந்த துறவியைப் பார்த்தவுடன் மந்திரி அவருடைய காலில் விழுந்து வணங்கினார்.

உடனே அந்தத்துறவி மந்திரிக்கு ''நூற்றாண்டு காலம் வாழ்க'' என வாழ்த்தினார்.

இதைக்கேட்டவுடன் மந்திரிக்கு மிகுந்த திருப்தி அந்த நிறைவுடன் அரண்மனைக்குச்சென்றார்.

நேராக ராஜாவைப் போய்ப்பார்த்தார்.

'எங்கே போய்விட்டு வருகிறீர்கள்என்று ராஜா கேட்டார். காட்டுக்குபோய் வருகின்றேன்' 'அதுசம்பந்தமாக உங்களிடம் சொல்வதற்குஅவசரமாக வருகின்றேன்' என்றார். 'என்ன விஷயம்?' என்று கேட்டார்.

'காட்டில் ஒரு துறவி உட்கார்ந்திருக்கிறார். அவரைப் பார்த்ததும் காலில் விழ வேண்டும்போல இருந்தது. விழுந்தேன் உடனே அவர் மனதாரவாழ்த்தினார். ஆசீர்வாதம் பண்ணினார் என்று கூறினார். ராஜா யோசித்துப் பார்த்தார். நானும் போனால் நல்லதுதான் என முடிவெடுத்தார்.

'இப்பொழுது நிலைமை நமக்கு சாதகமாகஇல்லை. அதனால் சாமியாரிடம் போய் ஆசீர்வாதம் வேண்டுவோம்என முடிவெடுத்தார்.

உடனே காட்டுக்கு புறப்பட்டுபோனார். இவர் காட்டுக்குப்போய் சேர்ந்த நேரத்தில் துறவி தியானத்தில் இருந்தார்.

'சுவாமி தியானத்தில் இருக்கிறார் சிறிது நேரம் இருங்கள் என்று அங்கிருந்த சீடர்கள் கூறினார்கள்.

'நான் யார் தெரியுமா? இந்த நாட்டு மன்னன்' ராஜா வந்திருக்கிறார் என்று உங்கள் குருவிடம் சொல்லுங்கள் என்றார்.

'முனிவருடைய தியானத்தை கலைக்கமுடியாது' என சீடர்கள் கூறினார்கள்.

ராஜா காத்திருந்தார்.

அதிக நேரம் கழித்து முனிவர் கண்ணை விழித்துப் பார்த்தார்.

நான் தான் இந்த நாட்டு ராஜா வந்திருக்கிறேன் என்னுடைய மந்திரி இங்கே வந்திருந்ததாகவும் நீங்கள் அவரை வாழ்த்தினதாகவும் கேள்விப்பட்டேன் அதுதான் நானும் வந்தேன். என்னையும் நீங்கள் வாழ்த்த வேண்டும் என்றார்.

அமைச்சரை வாழ்த்தியதைவிட என்னை அதிகமாகவே வாழ்த்த வேண்டும். ஏன்என்றால்நான் இந்தநாட்டு ராஜா என்றார்.

முனிவர் நிமிர்ந்து ராஜாவைப் பார்த்து 'நான் செத்த பின்பு வா அதன் பின்னர் உன்னை வாழ்த்துகிறேன்' என்றார்

செத்தபின் எவ்வாறு வாழ்த்த முடியும்? ராஜாவுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரே குழப்பமாக இருந்தார். அத்துடன் திருப்பியனுப்பியது அவமானமாகவும் இருந்தது.

அமைச்சரைக் கூப்பிட்டார் நடந்தவற்றையெல்லாம் கூறினார். அமைச்சருக்கு உடனே புரிந்தது. ராஜாவுக்கு விபரமாக விளக்கினார்.

'நான் என்கிற செருக்கு உன்னிடம் உண்டு அது ஒழிந்தபின்னர் தன்னிடம் வரச் சொல்லியிருக்கிறார்' என்று விளக்கினார். ராஜாவிற்கு அதற்குப் பின்புதான் விபரம் புரிந்தது.

தன்னிடமிருந்த அகங்காரத்தை கொஞ்சம் கொஞ்சமாக குறைத்தார். அது பூராகவும் ஒழிந்ததன் பின் முனிவரிடம் சென்று ஆசீர்வாதம் வாங்கினார்.

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

## ஹர்த்தால் பூரணவெற்றி

# நிறுவனங்களுக்கும், மக்களுக்கும் மனிதநேய அமைப்பு நன்றி தெரிவிப்பு!

(யாழ்ப்பாணம்)

நேற்று முன் தினம் இடம் பெற்ற ஹர்த்தால் வெற்றிகரமாக நிறைவுபெற ஒத்துழைப் பளித்த சகல நிறுவனங்களுக்கும், மக்களுக்கும் யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

நேற்றைய தினம் இடம் பெற்ற ஹர்த்தால் பூரண வெற்றியை பெறுவதற்கு ஒத்துழைப்புத் தந்த சகல திணைக்களங்களுக்கும், பொது மக்களுக்கும் இவ் நன்றி தெரிவித்து யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்பு விடுத்த அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

புரிந்துணர்வு ஒப்பந்தம் மட்டில் அரசு கடைப்பிடித்து வரும் அசமந்தப் போக்கை கைவிட்டு சமாதானத்தை நோக்கி ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் துரிதமாக நின்று ஈடுபடுமாயின் மக்கள் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படாது.

அதேவேளை புரிந்துணர்வு ஒப்பந்தம் மட்டில் அரசின் அசமந்தப்போக்கை கைவிட்டு சமாதான முன்னெடுப்பிலுள்ள விடயங்கள் சம்பந்தமாக கதைப்பதற்கு சந்தர்ப்பம் கேட்டு பிரதமருக்கு கடிதம் அனுப்பப்பட்டிருப்பதுடன் அதன் பிரதிகள் பாதுகாப்பு அமைச்சர், புனர்வாழ்வு அமைச்சர் மற்றும் கண்காணிப்புக்குழு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், ஐ.நா.உயர்ஸ்தானிகராலயம், வெளிநாட்டு தூதுவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

## இன்று முதல் மூன்று தினங்கள் 'மூன்றாவது மனிதன்'

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக தமிழ் துறையின் ஆதரவில் ''மூன்றாவது மனிதன்'' புத்தகக் காட்சியும்விற்பனையும்இன்று தொடக்கம் நாளை மறுதினம் வரை மு.ப.10.00மணி முதல் பி.ப. 5.00 மணிவரை யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (உ-3)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

முதியவர்களின் நலன்களைப் பாதுகாத்தல் தொடர்பான கருத்தரங்கு ஒன்று இன்று மாலை 4.00 மணிக்கு குருநகர் முன்னேற்றக் கழகத்தில் நடத்தப்படவுள்ளது.

குருநகர் யாகப்பர் ஆலயப் பங்குத்தந்தை அருட் திரு. ஏ.பீ. ஜெயசேகரம்தலைமையில் இடம்பெறும் இக் கருத்தரங்கில் குருநகர் முன்னேற்றக்கழக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், நிர்வாகிகள் பங்குபற்றவுள்ளனர். (த-06)

## சைவசமய பாட கருத்தரங்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

இன்று இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ள சைவ சமயபாட கருத்தரங்கு தவிர்க்கமுடியாத காரணத்தினால் இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு மண்டபத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக சைவபரிபாலனசபையின் பரீட்சைச் செயலாளர் சைவப்புலவர் வ. கந்தசாமி அறிவித்துள்ளார். (உ-3)

## முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அனைத்து சனசமூக நிலையங்களுடான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை பி.ப 4-00 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் அனைத்து சனசமூக நிலையங்களினதும் தலைவர், செயலாளர்உட்பட அனைத்து நிர்வாக உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வலிகிழக்கு சனசமூக நிலையங்களின் சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (த)

## மத்திய கிழக்கில் இலங்கைப் பெண்களுக்கு வேலை வாய்ப்புக்கள்

(கொழும்பு)

வெளிநாடுகளில் வீட்டுப் பணிப்பெண்கள் வேலை வாய்ப்பைத்தவிர, ஏனைய தொழில்களையும் இலங்கைப் பெண்கள் தற்போதுபெற்றுக் கொள்ள முடியுமென்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் சங்கம் தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கில், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் மறுக்கப்பட்டுள்ள வேலை வாய்ப்பை தற்போது இலங்கையர்கள் பெற்றுக்கொள்ள முடியும்,

இதேவேளை, இலங்கையில் தொழில் ரீதியாக திறமை வாய்ந்த யுவதிகள் காணப்படுகிறார்கள் என்றும் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (உ-9)

## இருவேறு இடங்களில் சூரியமின் கலங்கள் திருட்டு

(ஊர்காவற்றுறை)

புளியங்கூடல், வேலணைப் பகுதியில் தொலைபேசிக்காகப் பயன்படுத்தப்படும் சூரிய மின்கலங்கள் இனம் தெரியாதோரால் நேற்றுமுன் தினம் இரவு திருடப்பட்டுள்ளன.

வேலணைப் பகுதியில் இரண்டு மின்கலங்களும் இரண்டு ஆர் என் லைன்பெட்டிகளும் மற்றும் புளியங்கூடலில் சூரிய மின்கலன் ஒன்றும் திருட்டுப்போயுள்ளதுடன் ஒரு மின்கலம் சேதமாக்கப்பட்டுள்ளது.

புளியங்கூடல் பகுதியில் திருட்டுப் போயுள்ள இடத்திலிருந்து 75 மீற்றருக்குள் கடற்படையின் மினிமுகாம் இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-75)

## உருப்படியான மாற்றங்கள் சமாதான விடயத்தில் ஏற்பட்டு வருகின்றன லண்டனில் அமைச்சர் பீரிஸ்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் காரணமாக சமாதான நடவடிக்கைகள் தொடக்கி வைக்கப்பட்டிருக்கவில்லை.

செப்ரெம்பர் 11 இல் அமெரிக்காவில் நிகழ்ந்தவை புலிகளின் மனோபாவத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

இதேவேளை புதிய அரசாங்கமும் டிசம்பர் 5 ஆம் திகதி பதவிக்கு வந்தது இவற்றினாலேயே சமாதான நடவடிக்கைகள் தொடங்க வாய்ப்புக்கிடைத்தது.

இவ்வாறுஅமைச்சர் ஜீ.எல். பீரிஸ், லண்டனில்கொமன்வெல்த்சங்கக்கூட்டமொன்றில் கடந்ததிங்களன்று தெரிவித்தார்.

நீண்ட காலமாக இருதரப்பினரிடையேயும் அவநம்பிக்கையும் சந்தேகமும் இருந்து வந்த காரணத்தினாலேயே இனப்பிரச்சினைவிடயத்தில் தீர்வொன்று எட்டப்பட முடியாமலிருந்தது. இப்போது புது முகங்கள ஆட்சிக்கு வந்ததாலும், புதியசிந்தனைதலையெடுத்தாலும் புதிய உத்திகள் வகுக்கப்பட்டதன் பேரிலுமே சமாதான விடயத்தில் உருப்படியான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

## அமைச்சர் சுரநிமல யாழ். வருவார்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைக் கல்வியமைச்சர் சுரநிமல ராஜபக்ஷ மீண்டும் அடுத்த மாதம் யாழ். விஜயம்ஒன்றைமேற் கொள்ளவுள்ளார்.

குடாநாட்டிலுள்ள பாடசாலைகளில் புதிதாக அமைக்கப்பட்ட நூலகங்களை இங்கு வரும்அமைச்சர்திறந்து வைக்கவுள்ளார். (உ-19)

## பல்கலைக் கழகங்களில் ஏற்படும் நிதி நெருக்கடியை தடுப்பதற்கு புதியதிட்டம்

(கொழும்பு)

எதிர்காலத்தில் பல்கலைக் கழகங்களில் நிதி நெருக்கடி ஏற்படுவதை தடுப்பதற்கான திட்டமொன்று அமுல் செய்யப்படவுள்ளது.

தொலைக்கல்வி, தொலைப் பயிற்சி அமைச்சும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் இணைந்தே இத்திட்டத்தை அமுல் செய்யவுள்ளன.

இது தொடர்பாக அண்மையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது முடிவெடுக்கப்பட்டதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் வீ. ஆர். ஆர். எம். மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

இந்த பேச்சுவார்த்தைகளின் போது மூன்று முக்கிய யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

★ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கணக்காய்வுப் பிரிவும், பல்கலைக் கழகங்களின் முகாமைத்துவ பிரிவும் இணைந்து நிதிநெருக்கடிகள் தொடர்பாக ஆராய்தல்,

★ அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர் நிறுவனத்தின் மூலம் பல்கலைக்கழகங்களின் கணக்காய்வு அதிகாரிகளிற்கு கூடிய பயிற்சியளித்தல்.

★ சகல பல்கலைக்கழகங்களினதும் நிதி நெருக்கடியை தீர்க்கும் வகையில் கணக்காய்வாளர் திணைக்களத்தின் ஆலோசனைகளை பெற்றுக் கொள்வது என்பனவே இப் பேச்சுவார்த்தைகளின் போது முன்வைக்கப்பட்ட மூன்று முக்கிய யோசனைகளாகும், (த-8)

## சிந்தனைக்கு விருந்து

### சீதனம் என்னும் சீரழிவு!

சீதனம் என்னும் சீரழி வாலே
சிதைந்திடும் தமிழர்தம் சமூகம்
ஆதனம் ஈந்தும் அளவிலாப் பணத்தை
அள்ளியே வழங்கியும் அடங்காப்
போதைய ராகி மேலுமே சுரண்டப்
புகுகின்ற மாப்பிளைக் கூட்டம்
நாதியற் றோராய் நங்கையர் தம்மை
நலித்திடல் கொடுமையிற் கொடுமை!

-பழையவன்

## பிரான்சின் குட்டி யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கையர்களின் வர்த்தக நிறுவனங்களுக்கு

# அந்நாட்டுப் பொலிஸார் சீல்வைப்பு

(பாரிஸ்)

பிரான்சின் தலைநகர் பாரிஸில்சின்னயாழ்ப்பாணம்என அழைக்கப்படும் பகுதியிலுள்ள இலங்கையரின் கடைகள் சிலவற்றை பொலிஸார் மூடியுள்ளனர் பிரான்சினுள் மனிதர்களை கடத்திகொண்டுவருதல் சட்டவிரோத வங்கிச்செயற்பாடுகளில் ஈடுபடுதல் ஆகியவை தொடர்பாக பாரிஸ்நகர மஜிஸ்ரேட்விடுத்தஉத்தரவின் பெயரிலேயே மேற்படிநடவடிக்கை பொலிஸாரால் எடுக்கப்பட்டுள்ளது.

ஒரு ஆபரணவிற்பனைநிலைம், ஒருபலசரக்கு கடை ஒருவீடியோவாடகை நிலையம் ஒருசர்வதேச தொலைத்தொடர்புநிலையம் என்பனவே மூடப்பட்டவையாகும்.

ஆட்களை பிரான்சிற்குள் கடத்திக்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு உதவுதல் சட்டவிரோத குடியேறறக்காரர்களை வேலைகளில் அமர்த்துதல், சட்டவிரோதமாக பணக்கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுதல் ஆகிய குற்றச்சாட்டுகளுக்கு இவர்கள் விளக்கமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.மேற்படி நிறுவனங்களில் ஒன்று 1993ம்ஆண்டிலிருந்து செய்தித்தொலைத்தொர்பு வசதிகளை சட்டவிரோதமாகவைத்துப் பயன்படுத்தி வந்துள்ளது.

மேற்படிவர்த்தக நிலையங்களை இலங்கையின் வடக்குகிழக்கிலிருந்துயுத்தம் காரணமாக இடம்பெயர்ந்தவர்களே நடத்திவருகின்றனர் இவர்களிடம் பலவர்த்தக நடவடிக்கைகளும் உள்ளன இரும்பு வியாபாரம், மென்பொருள் வியாபாரம் என்பனவும் உள்ளன இவர்கள்நடத்தும் உண்டிச்சாலைகள் மிகவும் பிரபலமாக விளங்குகின்றன.

இதுவரைகாலமும் பிரதமராகவிருந்த சோசலிசகட்சியின் லயனல் ஜொசபின்சட்டவிரோதிகள் விவகாரத்தை பெரிதுபடுத்தாமலிருந்தார் ஆனால் கடந்தவாரம்நடைபெற்ற தேர்தலில் வலதுசாரி வேட்பாளர் வெற்றியிட்டியதன் பின்னர் இப்பொழுது வெளிநாட்டவர்களின் சட்டவிரோத நடவடிக்கைகள் மீதுகடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன: (த

### முத்திரைகளுக்கு தட்டுப்பாடு

(கோப்பாய்)

தற்போது தபால் கந்தோர்களில் ரூபா 4.50, 2.00பெறுமதியான முத்திரைகளுக்குப் பலத்ததட்டுப்பாடு நிலவிவருகின்றன. (உ-79)

### ரயில் விபத்து இருவர் பலி

(கொழும்பு)

பொல்காவலை நோக்கிச் சென்ற ரயில் அளவ பகுதியில் விபத்துக்குள்ளானதில் இருவர் பலியானதுடன் 13 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை 3.00 மணியளவில் அளவ ரயில் நிலையத்தில் தரித்து நின்ற சரக்கு ரயிலுடன், பயணிகள் ரயில் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

சமிக்கை தவறுகளாலேயே இவ் விபத்து ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. (உ–9)

## பயங்கரவாத ஒழிப்பு

# ஒன்றுக் கொன்று உதவி புரிய சர்வதேச அமைப்புகள் தீர்மானம்

(லிஸ்பென்)

பயங்கரவாதத்திற்கெதிராக போராட்டம் நடத்த, நேட்டோ அமைப்பு, ஐக்கிய நாடுகள் சபை உட்பட சர்வதேச அமைப்புக்கள் பல இணைந்து செயற்பட உறுதி பூண்டுள்ளன.

போர்த்துக்கலின் தலைநகரான லிஸ்பென் நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பயங்கரவாதத்திற்கெதிரான கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அல்கெய்டா இயக்கம் தொடர்ந்தும் உலகத்துக்கு பாரிய அச்சுறுத்தலாக உள்ளது.

பயங்கர வாதத்திற்கெதிராக மிகக்கடுமையான நடவடிக்கை மேற்கொள்வது அவசியம். இவ்விடயத்தில் சர்வதேச அமைப்புகள் ஒன்றுக்கொன்று உதவியாக செயற்படுவது மிக முக்கியமானது.

திறந்த மனத்துடன் தகவல்களைப் பரிமாறிக்கொண்டு இந் நடவடிக்கையை முற்றுமுழுதாக செயற்படுத்தல் முக்கியமானது எனவும் அமைப்புகள் கூட்டத்தில் கருத்து வெளியிட்டுள்ளன. (உ-9)

## முன்னாள் மன்னருக்கு முக்கிய பதவிகள்

ஆப்கானிஸ்தானின் முன்னாள் மன்னர் முகமட் தாஹிர்ஷாவிற்கு முக்கிய பதவிகளை வழங்க இடைக்கால அரசின் தலைவர் ஹமித் ஹர்ஷா முன்வந்துள்ளார்.

கடந்த 30 ஆண்டுகளாக இஸ்ரேலியர்களின் பிடியிலிருந்து நாடு திரும்பிய முகமட்டுக்கு முக்கிய 7 பதவிகள் வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (த-8)

## போருட் ஏற்பாட்டில் தலைமைத்துவ பயிற்சி

(காரைநகர்)

போரூட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் பிரதேசரீதியாக தலைமைத்துவ பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கிராம அபிவிருத்திச் சங்கங்கள் சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள், கடற்றொழில் சங்கங்கள் போன்ற சமூக அமைப்புகளின் உறுப்பினர்களிடையே தலைமைத்துவ பண்பினை வளர்க்கும் நோக்குடன் இப் பயிற்சிகள் வழங்கப்பட்டுவருகின்றன.

இந்த வகையில் கடந்த 7 ஆம் திகதி காரைநகரில் இத் தலைமைத்துவப்பயிற்சி நடைபெற்றது.

இதேபோல், எதிர்வரும் 21 ஆம் திகதி வேலணை பிரதேச செயலகத்திலும், 27ஆம் திகதி அனலைதீவிலும் மேற்படிபயிற்சிநடைபெறவுள்ளது (உ-246)

## செம்மணி புதைகுழி விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பாக சி.ஐ டியினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த திங்களன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் சந்தேக நபர்களான கப்டன்லலித்குமாரலெப் அதுல உதயகுமார, கப்டன்டில்ஷான் பெரேரா,லெப்டினன் விஜேசிறிவர்த்தன மற்றும் கான்ஸ்டபிள்சமரவிக்கிரம ஆகியோர் கொழும்பு பிரதான மஜிஸ்திரேற் ஏ.ஏ. ஆர் ஹய்யந்துடுவமுன்னிலையில்ஆஜர் படுத்தப்பட்டனர்.

இதன்போது இவ்விசாரணைகள் எதிர்வரும் ஆகஸ்ட் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டதுடன் மேற்படிநபர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இன்னொருசந்தேகநபரான அப்துல்நஸார் போலிப்பெயர் பயன்படுத்திநாட்டை விட்டுச் சென்றுள்ளார். அவரின் தற்போதைய இருப்பிடத்தை தேடிக்கண்டுபிடிக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. (உ)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உயர்பட்டப் படிப்புகள் பீடம்**

**ஈராண்டுப் பகுதிநேரப் பட்டப்பின் கல்வித் தகைமைக் கற்கைநெறி**

**2002\2004**

**புதிய அனுமதி**

அரசாங்க பாடசாலைகளில் கடமையாற்றும் பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் 2002. 07. 19 இல் 50 வயதுக்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

இக்கற்கைநெறி தொடர்பான விண்ணப்பப்படிவங்களைப் பெறவிரும்புவோர் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் \ பல்கலைக்கழக நிதிக்கிளையில் ரூபா 50/- செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டினை உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்; தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் என்ற பெயரில் பெறப்பட்ட ரூபா 50/- இற்கான காசுக்கட்டளை \ தபாற்கட்டளையுடன் முத்திரையொட்டப்பட்ட, சுய முகவரியிடப்பட்ட தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி 2002. 07. 19 ஆகும்.

எழுத்துத்தேர்வு மற்றும் நேர்முகத்தேர்வு இரண்டினதும் பெறுபேறுகளுக்கமைய தெரிவுகள் இடம் பெறும்.

கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் பல்கலைக் கழகத்திலிருந்து 25 மைல் சுற்றாடலுக்குள் அமைந்துள்ள பாடசாலைக்கு இடமாற்றம் பெறுவதோடு, இக்கற்கை நெறிக்குப் பதிவு செய்யும்போது மேற்குறிப்பிட்ட இடமாற்றல் கடிதத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் யாவும் 2002. 07. 19 ஆம் திகதிக்கு முன்னர் உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதி அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இக்குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**பதிவாளர்**
யாழ். பல்கலைக்கழகம்
2002. 06. 13.

(C-4414)


### சிறுவர்களுக்கென

ஒருவரைஒருவர் நேசித்தல், உண்மை பேசுதல், அன்பாகவும், நேர்மையாகவும், உழைப்பில் அக்கறையோடும் துணிவோடு எதிர்கொள்ளல் என்பனவும் சிறுவர் இலக்கியத்தில் கலாபூர்வமாக விளங்கவைக்கப்பட வேண்டிய உள்ளடக்கமாகும்.

வடிவமைப்பு

சிறுவர் இலக்கிய நூல்களில் வடிவமைப்பு மிகவும் கவனிக்கப்படவேண்டியது. இந்த நூல்களின் எழுத்துக்கள் தெளிவாகவும், பெரிதாகவும் அச்சிடப்பட வேண்டும். சொற்கள் வரிகள் ஒவ்வொன்றுக்கும் இடையேயும் தகுந்த இடைவெளி இருப்பது அவசியம். பக்கங்களில் எழுத்துக்கள் அதிகஇடத்தைப் பிடிக்கக்கூடாது. சிறுவர்கள் கவனித்துப் பார்க்கத்தக்கதாக படங்கள் பெரிய அளவிலும், வண்ணங்களிலும் அமையவேண்டும். சிறுவர் நூல்களில் எழுத்துப் பிழைகள் அறவே இடம் பெறக்கூடாது. அட்டைப் படம் சிறுவர்களைக் கவரும் வண்ணங்களில் அமையவேண்டியது அவசியமாகும்.

சிறுவர் இலக்கியம்பற்றிய மேற்கூறிய கருத்துக்கள், தமிழிலே அவசரமாக செயற்படுத்தும் விதத்திலே உள்ளன என்பதில் இரண்டாவது அபிப்பிராயத்துக்கு இடமில்லை.

### தொண்டர்

திருத்தொண்டர் புராணம் என்று நாமமிட்டார்.

திருத்தொண்டர் புராணம் தில்லையில் அரங்கேற்றப்பட்டது. சித்திரைத் திருவாதிரை நாளில் ஆரம்பமாகி எதிராம் ஆண்டு சித்திரைத் திருவாதிரை நாளில் நிறைவு பெற்றது. சேக்கிழாரே பொருள் விரித்துரைத்தார்.

பேச்சினால் சைவம், பிறப்பினால் சைவம், வாக்கினால் சைவம், பெயரினால் சைவம், கேள்வியினால் சைவம் என்று சைவ உலகு தடுமாடுகின்ற போது அது அல்ல சைவம். இதுதான் சைவம் என்று சைவ உலகிற்கும் பிற உலகிற்கும் 'சைவ வாழ்வு இது' என்று அறுதியிட்டு உறுதி செய்வதற்குப் பெரியபுராணம் போல் பிறரது ஒரு பனுவல் காண்டல் அரிது! என்றும் வாழி பெரியபுராணம் சேக்கிழார் வாழி.

சேக்கிழார் பெரியபுராணத்தை 4253 விருத்தப் பாக்களால் பாடினர். அவ்வுண்மை. '...ஈண்டுரைத்த புராணத்தில் திருவிருத்தம் நாலாயிரத் திரு நூற்றைம் பத்து மூன்றாக அமைத்து' எனச் சேக்கிழார் புராணத்தில் காணப்படும். சேக்கிழார் புராணம் செய்தவர் கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார்.

உமாபதி சிவாசாரியார் காலம் கி. பி. 14 ஆம் நூற்றாண்டு என்பர். ஏறத்தாழ 600ஆண்டுகளுக்கு முன் 4253 பாடல்களாக விளங்கிய பெரியபுராணம் 4286 பாடல்களாக விளங்குகின்றது.

33 பாடல்களைப் பெரிய புராணத்துள் யார் செருகினார்கள்? ஏன் செருகினார்கள்? அப்பாடல்கள் எவை? என்பது அறியமுடியாத புதுமையாக இருக்கும் வியப்புத்தான் என்னே!! என்னே!!

### முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் அழைப்பை ஏற்றுநேற்றுகொழும்புசென்ற மீனவ சங்கங்களின் தலைவர்கள் தங்களது சந்திப்பின்விபரங்களை விளக்கும் வகையிலான கலந்துரையாடல் ஒன்றை இன்று மு.ப 11.00 மணிக்கு கடற்றொழிலாளர் சங்க சமாசத்தில் நடத்தவுள்ளதாக வடமாகாண கடற்றொழிலாளர் சங்க சமாசத் தலைவர் சி. தவரட்ணம் அறிவித்துள்ளார்.

எனவே, அனைத்து மீனவ சங்கப்பிரதிநிதிகளையும் தவறாது இதில் கலந்து கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடையார்.

குறள்

வலம்புரி

## விளையாட்டு மைதானம்

நாட்டின் இருபது வருடகால யுத்தம் பிற நாடுகள் இலங்கைக்குள் நுழைந்து அதிகாரம் காட்டுமளவிற்கு நிலைமையைக் கொண்டுபோய் விட்டுள்ளது.

அரசு புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெற இருக்கும் கட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இந்தியாவுக்குச் சென்று திருகோணமலை எண்ணெய்க் குதத்தை இந்தியாவிடம் கையளித்துள்ளார்.

அதேபோல், அமெரிக்காவும் இலங்கைக்குள் நுழைவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் தலையீட்டை இலங்கை அரசு விரும்பவில்லலயாயினும் விடுதலைப் புலிகள் மீது கொண்ட அதியுயர் அச்சம் காரணமாக என்ன செய்வது, எதைச் செய்வது என்று தெரியாமல் இலங்கை அரசு அங்கலாய்க்கிறது. அதன் வெளிப்பாடாகவே இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் ஓட வேண்டிய நிலையில் இலங்கை அரசு தள்ளப்பட்டுள்ளது.

அதாவது நாடு அமெரிக்காவிடம், அல்லது இந்தியாவிடம் அடமானம் வைக்கப்பட்டாலும் தமிழர்களின் ஆதிக்கத்திற்கு அடிபணியக் கூடாதென்பது போல் அரசு செயற்படுகிறது.

ஒரே நாட்டிற்குள் பல்லின மக்கள் ஒற்றுமையாக வாழ்வதற்கான சூழ்நிலைகளை அரசுகள் ஏற்படுத்தத் தவறியதன் காரணமாக இன்று ஒட்டுமொத்தத்தில் நாட்டின் அனைத்து மக்களும் ஏதோவொரு வகையில் பாதிப்படைந்துள்ளனர்.


எனினும் அப்பாதிப்பின் தார்ப்பரியத்தை உணர்ந்து கொள்ளாது அரசு நடந்து கொள்ளுமாயின் இந்நாடு பிறநாடுகளின் விளையாட்டு மைதானமாகிவிடுமென்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழர்களுக் கெதிராக அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளிடம் உதவிகேட்டு கையேந்துவதை விடுத்து அமெரிக்காவே அச்சமடையக் கூடிய இராணுவ பலத்தை தமிழர்கள் மூலம் நாட்டில் உருவாக்க சிங்கள அரசுகள் முன்வர வேண்டும்.

அதுவே நாட்டிற்குப் பெருமை தருவதாகும்.

# தொண்டர் பெருமை உலகறியச் செய்தவர்

# தெய்வப் புலவனார் சேக்கிழாரே



## வெள்ளி நற்சிந்தனை

வைகாசிப்பூசம் சைவர்கள் மெய்ப்பூசை வழிபாட்டிற்குச் சிறந்த மகத்தான நாள். வைகாசி மாசத்தில் பூச நட்சத்திரம் செறிந்த நாள் தெய்வப்புலமைச் சேக்கிழாரைச் சிந்திப்பதற்கும் அவருடைய தெய்வீகத் திருவருள் புலமையையும் வந்திப்பதற்கும் உகந்த நன்னாள். இன்று நட்சத்திரம் வைகாசிப் பூசம்.

வெள்ளியங்கிரி முதலியார் என்பது சேக்கிழாரின் தந்தையார் நாமம் என்பர். அதேபோலத் தாயார் அழகாம்பிகை என்பார். சேக்கிழாரின் பிள்ளைத் திருநாமம் அருண்மொழித் தேவர். சேக்கிழார் என்பது அருண்மொழித் தேவருடைய குடிப்பெயர். சேக்கிழாருடைய தம்பியார் பாலறாவாயர்.

குலோத்துங்க சோழ அரசர் சேக்கிழாரை முதன் மந்திரியாராகக் கொண்டார். அவருடைய விழுப்பத்தையும் ஒழுக்கத்தையும் அறிந்த மன்னவர் உத்தம சோழப் பல்லவன் என்னும் உயர் பட்டம் வழங்கினான்.

சேக்கிழார் பெரியபுராணம் பாடியமையால் 'தொண்டர் சீர் பரவுவார்' என்னும் பெயர் சூட்டப்பெற்றது. பெரியபுராணம் 12 ஆம் திருமுறையாக வகுக்கப்பெற்றது.

### சேக்கிழார் காலம்

2 ஆம் குலோத்துங்க சோழனே அநபாய சக்கரவர்த்தி என்பர். அநபாயன் காலம் 1133-1146 என்பதனால் சேக்கிழார் காலம் 12 ஆம் நூற்றாண்டென்பர். அதனால் கலிங்கத்துப் பரணி பாடியசெயங்கொண்டாருக்கு முற்பட்டவர். ஒட்டக்கூத்தர் காலத்தவர். கம்பர் காலத்திற்குப் பிற்பட்டவர். சேக்கிழார் எனக் கால ஆராய்ச்சியாளர் கருதுவர். எனவே, ஏறத்தாழ இற்றைக்கு 1000 ஆண்டுகளுக்கு முற்பட்டது சேக்கிழார் காலம் எனலாம்.

சுந்தரமூர்த்தி நாயனார் திருத் தொண்டத் தொகைத் திருப்பதிகம் பாடுவதற்கு விறன்மிண்ட நாயனார் எப்படிக் காரணராக விளங்கினாரோ அதேபோலச் சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் இயற்றுவதற்கு அநபாயச் சோழ மன்னர் காரணராக விளங்கினார்.

அது வருமாறு;-

திருத்தக்க தேவரால் இயற்றப் பெற்றது சீவகசிந்தாமணி என்னும் காவியம். அது சமண சமய சார்புடையது. அந்நாளில் அக்காவியம் பலராலும் பாராட்டப்பெற்றது.

அநபாய அரசனும் அந்நூலில் மனத்தைப் பறிகொடுத்தான். அக்காப்பியச் சுவையில் பெரிதும் ஈடுபட்டு இன்புறலானான். அரசனுடைய ஆர்வத்தை அறிந்தார் அமைச்சர் சேக்கிழார்.

'அரசே! அந்நூல் இம்மைக்கும் பயன்படாது. மறுமைக்கும் அற்றே' என்று அரசனுக்கு அறிவுறுத்தினார்.

அரசன் அமைச்சரிடத்தில் வினவினான்:

'சீவக சிந்தாமணி பொய்க்கதையாயின், மெய்க்கதை யாது?'

'தொல்லையதாம் திருத்தொண்டத்தொகை அடியார் திருக்கதை இம்மைக்கும் மறுமைக்கும் உறுதி பயப்பது. அக்கதையைச் சிவாலய முனிவர் முதலானவர்கள் போற்றி வழிபட்டனர்' என்று சேக்கிழார் விரித்துரைத்தார்.

உண்மை அதுவானால் திருத்தொண்டத் தொகை அடியார்களுடைய வரலாற்றைக் காப்பியமாகப் பாடித் தரக் கேட்டான் அரசன்.

### திருத்தொண்டர் புராணம்

சேக்கிழார் தில்லைக்குச் சென்றார். தில்லைக் கூத்தப்பிரான் 'உலகெலாம்' என்று அசரீரி வாக்காக அடி எடுத்துக் கொடுத்தார். எடுக்கும் மாக்கதை இன்தமிழ் செய்யுளாக நடக்கும் மேன்மை பெற்றது. சிவனடியார் சிந்தை களிப்புறப் பிறந்தது தெய்வீகக் காப்பியம்.

இந்த உலகத்தில் இருவகை இருள். புறத்திருள், அகத்திருள். புறத்திருளைச் சூரியன் போக்குவதைப் போல, அகத்திருளை மாக்கதை மாற்றும். அதனால்

(6-ம் பக்கம் பார்க்க)

சிவ. சண்முகவடிவேல்

# சிறுவர்களுக்கென ஆக்கப்படும் இலக்கியங்கள்

# அவர்களின் ஆளுமைவிருத்திக்கு உதவவேண்டும்

சிறுவர் இலக்கியம் பற்றிய புதிய கருதுகோள்கள் அறிவியல் ரீதியாக இப்போது முன் வைக்கப்படுகின்றன. சிறுவர் இலக்கியம் கற்பனை, கற்பனைசாராதவை என்று (FICTION AND NONFICTION) பிரிக்கப்படுகின்றது.

இத்தகைய எழுத்துக்கள் எவ்விதம் ஆக்கப்பட வேண்டுமென்பதைப் பற்றி நிறையவே ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன;

சிறுவர்கள் யார் என்ற ஒரு கேள்வி எழுகின்றது. யூனிசெப், 18 வயதுக்குட்பட்ட எல்லாரையுமே சிறுவர்கள் என்று சொல்லுகின்றது.

இவர்களுக்கான எழுத்து, இவர்களின் உளவியல், கற்பனை என்பவற்றை அறிந்து அவர்களின் மொழியிலே சொல்லப்பட வேண்டுமென்பது முக்கியமான விடயம்.

### சிறுவர் இலக்கிய மனிதத்துவத்தின் அடித்தளம்

சிறுவர் இலக்கியத்திற்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுவது எதற்காக என்று ஒரு கேள்வி எழுப்பப்படலாம். அதற்கான விடை நீண்டதும் கனதியானதுமாகும். மனித குலத்தின் வளர்ச்சியினையும் அபிவிருத்தியையும் சிறுவர் இலக்கியம் உருவாக்குகிறதென்று கூறுவது ஏற்புடைய பதில், மனிதகுல அபிவிருத்தி என்று கூறுகின்ற போதுஅதனுள்ளே சிறுவர் இலக்கிய விரிவாக்கமும் முக்கிய பங்களிப்பினைக் கொடுக்கிறதென்பது கவனிக்கத்தக்கது. அபிவிருத்தி என்பதற்குள் உடலியல், அறிவுத்தேடல், உணர்ச்சி, ஒழுக்கம், கலாசாரம், ஆன்மீகம் போன்றவையும் உள்ளடங்கிவிடுகின்றன.

சிறுவர் இலக்கியம், வாசிப்புத்திறனை அதிகரிக்கின்றது. சிறுவர் வளரவளர சிந்தனை, கற்பனை, மொழியாற்றல், விரிந்த பார்வை என்பனவற்றைக் கொடுக்கின்றது. வாசிப்பு ஒருமனிதனை முழுமையாக்குகின்றது என்ற கருதுகோளின் முதற்புள்ளி இளமைப் பருவ வாசிப்பிலிருந்தே முன் வைக்கப்படுகின்றது.

### சிறுவர் இலக்கியத்தின் இலக்கணம்

சிறுவர்களுக்கான எழுத்தில் வன்முறை, திருட்டு' எதிர்மறைக்கருத்துக்கள் ஆகியன இடம்பெறவேண்டியதில்லை. வாழ்க்கையைநெறிப்படுத்தத் தகுதியானது இது தான்என்ற உளவியல் கருது கோள்இங்கே மனங்கொள்ளத்தக்கது.

சிறுவர்களுக்கான எழுத்து மிகவும் எளிமையானதாக இருக்க வேண்டும். இன்னும் கூறினால்அவர்கள்பேசுகின்ற மொழியே இந்த எழுத்தின் மொழியாகவும் அமைதல் அவசியம். சிறுவர்களின் வயது, அறிவு,அனுபவம் என்பனவற்றுக்கு அனுசரணையானதாக இம்மொழி இருக்க வேண்டும்.கற்பனைப்படைப்பு, தகவல் எழுத்து என்பனவற்றுக்கு அதற்கான ஓவியங்கள் பக்கபலமாக நிற்கும்.சிறுவர்களுக்கான எழுத்து வெளியீடுகள் மிகவும் வசீகரமும் கனமும் பெறுவது ஓவியங்களாலேயே என்பது அழுத்திச் சொல்லப்படத்தக்கது.

சிறுவர்கள் பிரமிப்பூட்டும் சம்பவங்களையும், வேடிக்கை நிகழ்ச்சிகளையும் உள்ளடக்கிய எழுத்துக்களை விரும்புகிறார்கள். அவர்களுக்கான எழுத்து- ஒழுக்கம் உடன் மறையான போக்கு புத்தூக்கம் என்பனவற்றை அடிச்சரடாகக் கொண்டிருக்க வேண்டுமென்பது முக்கியமான விடயமாகும்.இந்த உள்ளடக்கம் கொண்ட நூல்களை வாசிப்பதன் மூலமாக வாசகர்களாகிய குழந்தைகள் கற்பனை வளத்தையும் தேடலையும் பெற்றுக்கொள்ள முடியும்.

(6-ம் பக்கம் பார்க்க)

செ. யோகநாதன்

## தினசரி தியானம்

### புனிதன்

போற்றிஎன் பார்அம ரர்புனி தன்அடி
போற்றிஎன் பார்அசு ரர்புனி தன்அடி
போற்றிஎன் பார்மனி தர்புனி தன்அடி
போற்றிஎன் அன்புள் பொலியவைத் தேனே

-திருமந்திரம்

பண்டைப் பரம்பொருளே, நீ புனிதன் ஆதலால் அனைத்துக்கும் அனைவர்க்கும் நீ பொது.

கலப்பற்றது எதுவோ அது புனிதமானது. தன்மையில் கிட்டத்தட்ட ஒத்திருக்கும் இரண்டு பொருள்கள் ஒன்றோடு ஒன்று கலக்கின்றன. மாசு என்பதும் கலப்பு என்பதும் ஒன்று. தெய்வத்துக்கு ஒப்பான பொருள் ஒன்றுமில்லை தெய்வம் கலப்பு எடுத்துக்கொள்ளுதலுமில்லை. அது என்றைக்கும் தன்மயமாயுள்ளது. ஆகையால் அனைவரும் அதை நாடுகின்றனர்.

- ஸ்ரீமத் சுவாமிசித்பவானந்தர்

# சீனாவின் சகல இராணுவ உதவியையும் இலங்கை அரசு பெற்றுக்கொள்ளும்

## உடன்படிக்கை கைச்சாத்தானது

(கொழும்பு)

**இலங்கையும் சீனாவும் பாதுகாப்பு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் தெரவித்துள்ளார்.**

**இலங்கை இராணுவத்திற்கு சீனாவிடமிருந்து சகல விதமான இராணுவ உதவிகளையும் பெற்றுக்கொடுக்கும் இந்த உடன்படிக்கையில் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன கையெழுத்து இட்டுள்ளார்**

சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன அந் நாட்டு பாதுகாப்பு அமைச்சருடன் இராணுவ உதவி குறித்து விரிவாக ஆராய்ந்துள்ளார்.

விடுதலைப்புலிகள் ஆயுதக் கடத்தலில் ஈடுபடுவதைத் தடுக்கும் பொருட்டும் கடற்படையை மேலும் நவீன மயப்படுத்தும் பொருட்டும் இந்த இராணுவ உதவி பெறப்பட்டுள்ளதாகவும் இராணுவத் தரப்பிலிருந்து கொடுக்கப்பட்ட அழுத்தம் காரணமாகவே இந்த உடன்படிக்கை செய்யப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

எனினும் இந்த உடன்படிக்கையின் விவரங்கள் எதனையும் வெளிவிவகார அமைச்சு வெளியிடவில்லை.

இதேவேளை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ள நிலையில் இலங்கை அரசாங்கம் அமெரிக்கா உட்பட வல்லரசு நாடுகளுடன் பாதுகாப்பு ஒப்பந்தங்களை செய்து வருவது தமிழ் மக்கள் மத்தியில் பீதியையும் அச்ச உணர்வினையும் ஏற்படுத்தி வருகின்றது. (த)

---

### அமைச்சர் இம்தியாஸ்...

நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவுள்ளார்.

15ந் திகதி பி.ப யாழ் செயலகத்தில் உயர் மட்ட அதிகாரிகளைச் சந்தித்துப் பேசவுள்ளார். அதனைத் தொடர்ந்து யாழ் செயலகத்தில் தகவல் திணைக்களத்தின் ஊடக நிலையம் ஒன்றினையும் அமைச்சர் திறந்து வைப்பார்.

16ந் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ் செயலகத்தில் பத்திரிகையாளர்களுக்கு பயிற்சிப் பட்டறை ஒன்றையும் ஆரம்பித்து வைப்பார்.

இப் பயிற்சிப் பட்டறையில் கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவரும் முன்னாள் தினகரன் ஆசிரியருமான இ. சிவகுருநாதன், யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர். பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை, ஏ.என். எம். அமீன், லக்பிம பிரதமஆசிரியர் எம்.ஐ.எம். ஐயூப், கொழும்புப் பல்கலைக்கழக கம்பியூட்டர்துறை சிரேஷ்ட விரிவுரையாளரான நந்தசார ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர். இதன்போது பத்திரிகையாளர்களுக்கு அடையாள அட்டையும் அமைச்சர் வழங்குவார். அன்றைய தினம் ஸ்ரான்லி வீதியிலுள்ள மகாலட்சுமி கட்டடத்தில் லேக்கவுஸ் காரியாலயத்தை திறந்து வைப்பதுடன் பருத்தித்துறையில் புதிய தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தையும் ஆரம்பித்து வைப்பார்(வ)

---

### வீடகளுக்கு செல்ல...

அப்பகுதிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் செயலாளர் இரா. சம்பந்தன், விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ரூபன் உட்பட பலபிரமுகர்கள் இன்று அங்குள்ள நிலைமைகளை நேரில் அவதானிக்கவுள்ளனர். (த)

---

### துரைரட்ணசிங்கத்தை...

கிழக்கு மகாணத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் தமிழர் கூட்டமைப்புச் சார்பாக போட்டியிட்டு அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றவரான துரைரட்ணசிங்கத்தையே புலிகள் சிபார்சு செய்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.(உ)

### புலிகளின்...

கொள்கைத் தீர்மானம். முன்னைய அரசு போன்று, முதலில் பேச்சுக்களை நடத்தி உடன்பாடு காணாமல், பாராளுமன்றத்தில் அரசியல் சட்டத் திருத்தங்களை சமர்ப்பித்து நிறைவேற்றுவதில் ரணில் விக்கிரமசிங்கா தலைமைக்கு நம்பிக்கையில்லை. இப்பொழுது அரசாங்கம் முழு இலங்கைக்கும் சமமாக அதிகாரத்தைப் பரவலாக்குவதைப் பற்றி யோசிக்கவில்லை ஒருவித சமச்சீரற்ற அதிகாரப் பரவலாக்கம் பற்றியே நுணுக்கமாக யோசித்து வருகிறது. அந்தந்தப்குதியில் வாழும் மக்களின் தேவை, யதார்த்தம் என்பனவற்றின் அடிப்படையிலேயே அதிகாரம் பரவலாக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் கூறினார். (இ)

---

அமுத சுரபி கலாமன்றம் நடத்தும்

## மாபெரும் தமிழ் விழா நாளை ஆரம்பமாகிறது

(யாழ்ப்பாண்ம்)

அகில இலங்கை அமுதசுரபி கலா மன்றம் நடத்தும் மாபெரும் தமிழ் விழா நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது. நாளை 15ம் திகதி நடைபெறும் தமிழ் விழா பிற்பகல் 3மணிக்கு மன்றத் தலைவர் இ.நித்தியானந்தன் தலைமையில் நீர்வேலி காமாட்சி அம்பாள் திறந்த வெளி அரங்கில்நடைபெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர், கோப்பாய் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன், கவிஞர் கலாநிதி இ.முருகையன், திருமதி ருக்குமணி ஆனந்தவேல், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் இ.குகநாதன், செ.சுப்பிரமணியம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் மன்ற அமைப்பாளரும் யாழ் பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரையாளருமான தி.வேல்நம்பி தொடக்கவுரை நிகழ்த்துவார்

சுழலும் சொற்போர், பட்டிமன்றம், வில்லிசை, நாடகம் ஆகிய கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

---

### குடாக்கடல்...

மீன்பிடிப்பதற்கான பாஸ் நடைமுறையம் முற்றாக நீக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள் மீன்பிடிப்பதற்குச் செலுத்தும் மார்க்கங்கள் தொடர்பான வரை படங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் மீன் பிடிப்பதற்குச் செல்லும் மீனவர்கள் தொழில் முடிந்து இரவில் வரமுடியாது என்றும் அவர்கள் பகலிலேயே வர வேண்டும் என்றும் தீர்மானிக்ககப் பட்டுள்ளது. இதுவே இரசு வேளைகளில் தொழிலுக்குச் செல்ல முடியாதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பின் போது மீனவர்கள் சார்பில் யாழ் மீனவர்கள் சங்கத்தின் தலைவர் சி. தவரத்தினம் செயலாளர் இராஜாராம், பொதுமுகாமையாளர் ஆர். இராஜாராம் ஆகியோருடன் யாழ் அரச அதிகர் க. சண்முகநாதன், றான் பொறியியலாளர் எஸ் கரிதரன் ஆகியோரம் கலந்து கொண்டனர்.

நேற்றைய பேச்சுவார்த்தையை அடுத்து 15ம் திகதி திங்கட்கிழமை வட பிராந்திய கடற்படைத் தளபதியுடன் யாழ் செயலகத்தில் பேச்சுவார்த்தை நடத்தி மீன்பிடிக்கக் கூடிய இடங்களையும் நேரில் சென்று பார்ப்பதெனவம் முடிவு செய்யப் பட்டுள்ளது. (வ)

---

### வ்யோதிபரின்...

சடலம் அடையாளம் காணும் பொருட்டு அக்கராயன் ஆஸ்பத்திரியில் காவல் துறையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச்சடலம் 5அடி 4அங்குல உயரமும், நரைத்த தலை முடியுடன் பச்சை சேர்ட்டும், சாரமும் அணிந்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம)


**10% தொடக்கம் 40% வரை கழிவு விலையில் விற்பனையாகின்றது**

மாணவர்களுக்கான பாடசாலைப் புத்தகங்கள், உபகரணங்கள் பட்டப் படிப்பிற்கான வைத்தியம், பொறியியல், வர்த்தகம், கணனி, மின்னியல பாடத்துக்கான நூல்கள் ஆங்கில, தமிழ் நாவல்கள், சிறுவர்களுக்கான சகல விதமான புத்தகங்கள், வாழ்த்து மடல்கள், எல்லாம் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்

**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
**NO. 212 K.K.S வீதி,**
**யாழ்ப்பாணம்**

(c/4417)





## கண்ணீர் அஞ்சலி



சுன்னாகம் ஆசிரியை
திருமதி சறோயினிதேவி குலசிகாமணி
அவர்களின் அன்புக் கணவர்

**அமரர் ம. குலசிகாமணி**

*(ஓய்வு பெற்ற நீர்ப்பாசனப் பணிப்பாளர்)*

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்

முன்னாள் அதிபர்
குடும்பம்

[C/4418]


**யாழ் மக்களிற்கும் எஸ்- லோன் (S - LON) வாடிக்கையாளர்களிற்கும் ஓர் நற்செய்தி**

**கடந்த காலங்களை விட சிறந்த சேவையை வழங்கும் முகமாக**

**எஸ் - லோன் (S - LON) லங்கா நிறுவனம்**

**இல. 287, ஸ்ரான்லி வீதியிலுள்ள ஜெசிபா ஏஜென்சியின் விநியோக நிலையத்தை**

இன்று (14.06.2002) வெள்ளிக்கிழமை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கின்றது என்பதனை வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்வதோடு இவ் விழாவில் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

S - Lon PVC Pipe

S - Lon PE + Water Tank

**ஜெசிபா ஏஜென்சி**

யாழ் எஸ் லோன் விநியோக நிலையம்
287, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Polymate Plastic Ware

Melamate Tableware

தொலைபேசி : 021 - 2653 தொலைநகல் : 021 - 2146

[C/4416]